# கல்விப்பணியில் அமலமரித்தியாகிகள்

## யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியூடாக ஆற்றிய பணிகள்

**சகாயதர்ஷன் லம்பேட், அமதி**
BPh, BTh (Rome)
*புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.*

*யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி வட இலங்கையின் கல்வி வரலாற்றில் மிக முக்கியமான நிறுவனங்களில் ஒன்றாகும். 1850 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்நிறுவனம், அமலமரித்தியாகிகளின் கல்வித் தத்துவம், நிர்வாகத்திறன், ஆன்மீகப் பார்வை மற்றும் சமூகப் பொறுப்புணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் வளர்ச்சியடைந்தது. 1850 முதல் இன்று வரை கல்லூரியின் கல்வி வளர்ச்சியில் அமலமரித்தியாகிகள் ஆற்றிய பங்களிப்பை வரலாற்று ஆதாரங்களின் அடிப்படையில் ஆராய்கிறது இக்கட்டுரை; குறிப்பாக கல்வி, ஒழுக்கம், ஆன்மீகம், கட்டிட அபிவிருத்தி, ஆசிரியர் உருவாக்கம், இணைப்பாடவிதான செயற்பாடுகள் மற்றும் சமூகப் பங்களிப்புகள் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன.*

கி.பி. 1796ல் இலங்கையில் தமது காலணித்துவ ஆட்சியை தொடங்கிய ஆங்கிலேயர் தமக்கு முன்பாக இந்நாட்டை ஆட்சி செய்தவர்கள்போல் அல்லாது சமயப் பொறை உடையவர்களாக இருந்தமை, பல மதங்களைச் சார்ந்த ஆங்கிலப் பாடசாலைகள் தோற்றம் பெற ஏதுவாயிற்று. இவர்கள் தமது ஆட்சிக்காலத்தில் அங்கிலிக்கன் மிசனரிக் குழுக்களை நாட்டினுள் அனுமதித்து ஆங்கிலக் கல்வியையும், அதனூடாக மதத்தையும் பரப்ப முற்பட்டனர். இதனால் யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கு ஏறக்குறைய 35 ஆண்டுகளுக்கு முன்பாக பல அங்கிலிக்கன் பாடசாலைகளும் அமெரிக்கன் மிசனரிப்பாடசாலைகளும் ஆரம்பிக்கப்படக்கூடிய ஒரு பின்புலம் உருவாகி இருந்தது.

கி.பி. 1833ல் கோல்புறுக் யாப்பின்படி ஆங்கிலம் கற்ற சுதேச பிள்ளைகளை அரச வேலைகளில் சேர்த்துக்கொள்ளலாம் என்ற பிரகடனம் பெற்றோர் மத்தியில் ஆங்கிலக் கல்வி மீதான மோகத்தை அதிகரித்தது. இதனால் கத்தோலிக்க பெற்றோரும் தங்கள் பிள்ளைகளை கத்தோலிக்க பாடசாலைகள் இல்லாமையால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருந்த பிறமதப் பாடசாலைகளுக்கு அனுப்பவேண்டிய சூழல் உருவானது. இது கத்தோலிக்க திரு அவைக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியது. இது 'எமக்கு ஒரு கத்தோலிக்க பாடசாலை வேண்டும்' என்ற ஒரு விழிப்புனர்வை யாழ் பொதுநிலையினர் மட்டில் ஏற்படுத்தியிருந்தது.

அச்சந்தர்ப்பத்தில் ஒரு சிறந்த இறைபணியாளரான ஆயர் ஒராசியோ பெற்றாக்கினி யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். இவர் கி.பி. 1846 ஆம் ஆண்டில் உருவாக்கிய யாழ்ப்பாண கத்தோலிக்க பாடசாலை சபையே புனித பத்திரிசியார் கல்லூரி போன்ற பல கத்தோலிக்க பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு அடித்தளமாக அமைந்தது. 1849 ஆம் ஆண்டு யாழ். அடைக்கலநாயகி ஆலயக் காணியில் ஆயர் பெற்றாக்கினி தனது பணியை தொடர்ந்து கொண்டிருந்த வேளையில் யாழ்ப்பாண கத்தோலிக்க சமூகத்தவர்களுக்கு மிக அவசியமாக தேவைப்பட்ட ஒரு கத்தோலிக்க ஆங்கில பாடசாலையை ஆரம்பிக்கும் திட்டம் கருக்கட்டியது.

தூய அடைக்கல அன்னை ஆலய காணியில் ஆயர் இல்லத்திற்கு முன்பாக ஒரு தற்காலிக கொட்டகையில் 1949இல் ஒரு சில மாணவர்களுடனனேயே இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 1850ஆம் ஆண்டில் ஆயர் அவர்களின் வாசஸ்தலம் தற்பொழுது ஆயர் இல்லம் அமைந்துள்ள பகுதிக்கு மாற்றப்பட்டபோது பெற்றாக்கினி பாடசாலை என்று அழைக்கப்பட்டது.

**யாழ். கத்தோலிக்க ஆண்களின் ஆங்கிலப் பாடசாலை**

1850இல் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 1860 வரை "Jaffna catholic English Boy's School" என்ற பெயரே வழங்கப்பட்டு

வந்தது. இக்காலப்பகுதியிலேயே இலங்கையின் கல்வி நிர்வாகம் “மத்திய பாடசாலை ஆணைக்குழு” ஒன்றினால் மேற்பார்வை செய்யப்பட்டது. இக்குழுவில் 9 பேர் அங்கம் வகித்தனர். இவ்வாறான பின்னணியில் இப்பாடசாலையின் முதல் முகாமையாளராக அருட்தந்தை ஜெ. சி. மோலா என்பவரும் முதல் அதிபராக திரு. பற்றிக் போய் என்பவரும் நியமிக்கப்பட்டனர். அக்காலப் பகுதியில் ஆலய பணிகளுக்கு குருமார் மிகவும் போதிய அளவாக இருந்த காரணத்தினால் பொதுநிலையினர் ஒருவர் பாடசாலையின் முதல்வராக நியமிக்கப்பட்டார்.

1857இல் ஆயர் பெற்றாக்கினி காலமானார். புதிய ஆயராக வண. செமேரியா நியமிக்கப்பட்டார். இவரின் முயற்சியால் 7500 ரூபாய் பாடசாலைக்கான நிதியாக சேகரிக்கப்பட்டது. 1859 இல் அருட்சகோதரர் யோன் யோசப் பிறவுண், அமதி, அதிபர் ஆனார். இவருடைய காலப்பகுதியில் எமது பாடசாலை உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக மாற்றம் பெற்றது. 1862ல் அருட்சகோதரர் மெட்ரிக் ஜோசப் கோன்வே அதிபர் ஆனார். 1868ல் புதிய ஆயராக அதிவண. சி.பொஞ்சின், அமதி நியமிக்கப்பட்டார். அவரின் பின்னர் அருட்சகோதரர் முறுப்பே, அமதி என்பவர் அதிபராக நியமிக்கப்பட்டார். இவரே பாடசாலைக் கீதத்தை எழுதியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சில மாதங்களின் பின்னர் பாடசாலையின் ஆரம்பகால பழைய மணவர்களில் அருட்சகோதரர் பிளனகோன், அமதி புதிய அதிபராக நியமிக்கப்பட்டார். இக்கல்லூரியின் வரலாற்றில் அதிபர் பதவியை வகித்த முதல் பழைய மாணவர் இவரே என்பது குறிப்பிடத்தக்கது. கி.பி 1871ல் இக்கல்லூரி அதிபராகக் கடமை ஆற்றிக் கொண்டிருந்த வேளையிலேயே அவர் குருவாக திருநிலை படுத்தப்பட்டார். அதே ஆண்டில் யாழ்ப்பாணத்தில் புனித மடுத்தீனார் குருமடமும் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் மாணவர்களும் இப்பாடசாலையிலேயே கல்வி கற்றார்கள். இதனால் இக்காலப்பகுதியில் ஒரு மாணவ விடுதி, சிறிய

நூலகம், விளையாட்டு மைதானம் போன்றவற்றுடன் பாடசாலை வளர்ச்சியடைந்தது.

இது 1881 முதலாம் மாசம் பத்தாம் தேதி யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி என்று விருட்சமாக வளர்ச்சி அடைந்தது. இதே ஆண்டில் ஆங்கில அரசினால் நியமிக்கப்பட்ட ஆர்.எஸ் மோகன் என்பவரின் தலைமையிலான குழு நடைமுறையில் இருந்த மத்திய பாடசாலை கொள்கையை கலைத்துவிட்டு ஒரு கல்வி பணிப்பாளரின் தலைமையில் பொதுக் கற்பித்தல் திணைக்களம் ஒன்றை நிறுவியது. இதனைத் தொடர்ந்து உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்கான உதவி திறந்த மனதுடனும் முறையாகவும் திணைக்களத்தினால் வழங்கப்பட்டது. 1881 ஆம் ஆண்டு இக்கல்லூரி புனித பத்திரிசியார் கல்லூரியாக மாற்றம்பெற்றது. அப்போது அதன் அதிபராக அருட்சகோதரர் ஜே. ஆர். சிமித் அமதி நியமிக்கப்பட்டார். அவரோடு இரண்டு குருக்களும், இரண்டு அருட்சகோதரர்கள் மற்றும் 12 சுதேச ஆசிரியர்கள் கடமையாற்றினர். அருட்திரு ஸ்மித் அ.ம.தி அவர்களைத் தொடர்ந்து அருட்திரு சாள்ஸ் க. விற்றன் அ.ம.தி, அருட்திரு யூலன் கொலின்ஸ் அ.ம.தி, அருட்திரு பற்றிக் டன் அ.ம.தி, என்பவர்கள் 1901 வரை கல்லூரியில் அதிபர்களாக கடமை ஆற்றினார்கள். இவர்களில் அருட்திரு லிற்றன் என்பவரே கல்லூரியின் முதன் முதலாக பேண்ட் இசைக் குழுவை ஆரம்பித்தார்.

1903இல் அருட்திரு சாள்ஸ் மத்தியூஸ் அ.ம.தி ஒரு ஆசிரியராக சேர்ந்து கொண்டார். அவரைத் தொடர்ந்து அருட்திரு லோங் அ.ம.தி. அடிகளார் 1921ஆம் ஆண்டில் கல்லூரியில் ஆசிரியராக சேர்த்துக் கொள்ளப்பட்டு பின்னர் 1936 இல் கல்லூரி அதிபர் ஆனார். அருட்திரு சாள்ஸ் மத்தியூஸ் அ.ம.தி அடிகளார் அருட்திரு லோங் அ.ம.தி. அடிகளார் அதிபராக கடமையாற்றிக்கொண்டிருக்கும் காலப்பகுதியில் அதாவது 1947 இல் மீண்டும் கல்லூரிக்கு வந்து மத்திய பிரிவின் பகுதித்தலைவராக பதவி வகித்தார்.

இவர்களின் காலம் இக்கல்லூரியில் பொற்காலமாக கருதப்படுகின்றது. இவர்கள் பல சபைகளை ஆரம்பித்து பல மேற்கத்தேய கல்வி முறைகளையும் இங்கு அறிமைப்படுத்தி மாணவர்களுக்கு அறிவொளி காட்டினர். சுருங்கக்கூறின் அருட்திரு சாள்ஸ் மத்தியூஸ் அ.ம.தி அடிகளாரும் அருட்திரு லோங் அ.ம.தி. அடிகளாரும் ஏறக்குறைய 33 ஆண்டுகளுக்கு மேல் சேவையாற்றியுள்ளனர். இந்த இருபெரும் சேவை யாளர்களையும் இக்கல்லூரிச் சமூகமும் இப்பொழுது கல்லூரிக்கு வந்துசெல்லும் பழைய மாணவர்களும் பெருமையுடனும் நன்றியுடனும் நினைவு கூருகின்றனர்.

**ஒரு சமூக நோக்கு**

இங்கே புகழ்பூத்த பத்திரிசியார் கல்லூரின் தோற்றம் பற்றியும் இதில் பணியாற்றிய அதிபர்கள் பற்றியும் ஆராய்ந்தோம். ஒரு கல்வி நிறுவனம் 175 ஆண்டுகளைக் கடந்து பயணிக்கின்றது என்றால் அது சாதாரண விடயம் அல்ல. இன்று எம் கண்முன்னே பல தனியார் மற்றும் அரச நிறுவனங்கள் தோற்றம்பெற்று மறைந்து போனதை நாம் கண்கூடாகக் கண்டோம். ஒரு நல்ல, இறை விசுவாசம் உள்ள ஆயரினதும், ஆயருக்கு அப்போதைய கத்தோலிக்க திரு அவையோடு தோளோடு தோள்நின்று உழைத்த பொதுநிலை சமூகமும் எவ்வகை தூர நோக்கோடும், வைராக்கியத்தோடும் உழைத்திருப்பார்கள் என்று நோக்குமிடத்து இந்நிறுவனத்தின் வளர்ச்சி பிரம்மிக்க வைக்கிறது.

இக்கல்லூரியின் முற்றுமுழுதான வளர்ச்சியில் பெரும்பங்காற்றியவர்கள் அமலமரித்தியாகிகள் என்றால் அதில் ஐயமில்லை. கல்வியே அடைதற்கரிய மிகப்பெரும் செல்வமாகும் என்றறிந்து பணியாற்றிய அவர்கள் இக்கல்விப் பணியூடாக கத்தோலிக்க நம்பிக்கையையும், அப்போதைய சமூகத்தில் மலிந்துகிடந்த அறியாமையையும் அகற்றி யாழ் சமூகத்திற்கும், தமிழ் பேசும் மக்களுக்கும், பெரும் கொடையாக திகழ்ந்தார்கள் என்றால் அது மிகையாகாது.

கல்வியிலும், விளையாட்டிலும், இணைபாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்களை எப்படி உள்வாங்குவது,

எப்படி அவர்களின் ஆற்றலை வளர்ப்பது, இந்நாட்டின் எதிர்காலம் எங்கே செல்லும் எனக்கணித்து அதற்கான திட்டமிடல்களை மேற்கொள்வதில் உண்மையில் அமலமரித் தியாகிகள் பல்வேறு நாடுகளின் திரு அவையால் இன்றும் அழைக்கப்படுவதுபோல் "கடினமான இடங்களில் சிறப்புத் தேர்ச்சிபெற்ற பணியாளர்களே" ஆவர்.

உண்மையில் இவர்கள் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் சிறப்பிடம் பெற்றுள்ளனர். ஏனென்றால் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்ந்த பல குடும்பங்களின் பிள்ளைகளின் வளர்ச்சியில் ஆங்கில மொழியூடான கற்பித்தலினூடாக பலர் அரச வேலைகளைப் பெற வழிவகுத்திருக்கிறார்கள். கரையோரப் பகுதிகளிலே வாழும் மீனவ சமூகத்தினரின் பிள்ளைகளும் நற்கல்வி மற்றும் ஒழுக்கத்தினூடாக நல்வாழ்வு பெற வழிசமைத்திருக்கிறார்கள். சிறப்பாக இல்கல்லூரியில் கற்றும் கற்றலில் சிறந்த தேர்ச்சியை அடைய முடியாமல் திண்டாடிய மாணவர்களை சமூகத்தீமைகளின் பால் அடிபட்டுச்செல்லாமல் இருக்க காற்பந்து விளையாட்டை அறிமுகம் செய்து, விளையாட்டினூடாக அவர்களுக்கு ஒழுக்கத்தை ஊட்டி அவர்களும் வாழ்வில் முன்னேற வழிசமைத்தது இன்றும் இக்கல்லூரி காற்பந்தில் சிறந்து விளங்குகின்றமைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். யாழ்ப்பாணத்தின் ஏன் வடமாகாணத்தின் ஒரே ஒரு கத்தோலிக்க ஆண்கள் தனியார் பாடசாலை என்ற ரீதியில் இக்கல்லூரி பல ஆயர்களையும், சுதேச குருக்கள் மற்றும் துறவிகளையும் உருவாக்கி இலங்கைத் திரு அவைக்கும், மற்றும் வெளிநாடுகளுக்கும் மறைபரப்பாளர்களையும், பல கல்விமான்களையும் உருவாக்கிக் கொடுத்துள்ளமை இக்கல்லூரிக்கே உரிய பெருமையும் சிறப்புமாகும்.

**முடிவாக**

இக்கட்டுரையின் ஒட்டுமொத்த மதிப்பீட்டின்படி, புனித பத்திரிசியார் கல்லூரியின் வளர்ச்சியை அமலமரித்தியாகிகளின் அர்ப்பணிப்புமிக்க கல்வித் தொண்டிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. அவர்கள் கல்வியை வெறும் அறிவுப் பரிமாற்றமாகக்

கருதவில்லை. மாறாக மனிதனை முழுமையாக உருவாக்கும் செயல் முறையாகக் கருதினர். அறிவு, ஒழுக்கம், இறை நம்பிக்கை, சமூகப் பொறுப்புணர்வு மற்றும் தலைமைத்துவம் ஆகியவற்றை ஒருங்கிணைத்த அவர்களின் கல்வித் தத்துவம், கல்லூரியின் நீடித்த வெற்றிக்கான அடிப்படையாக அமைந்துள்ளது.

மேலும், இக்கட்டுரை புனித பத்திரிசியார் கல்லூரி வட இலங்கையின் கல்வி வரலாற்றில் ஒரு முக்கிய நிறுவனமாக மட்டுமல்லாமல், சமூக மாற்றத்திற்கும் தேசிய முன்னேற்றத் திற்கும் பங்களித்த ஒரு வரலாற்றுச் சக்தியாகவும் விளங்கியதை உறுதிப்படுத்துகிறது. ஆயிரக்கணக்கான பழைய மாணவர்கள் கல்வி, மருத்துவம், சட்டம், பொது நிர்வாகம், வணிகம், அறிவியல், சமயப்பணி மற்றும் சமூகச் சேவை போன்ற பல துறைகளில் ஆற்றிவரும் பங்களிப்புகள், கல்வித் தத்துவத்தின் நீண்டகால பயன்களை வெளிப்படுத்துகின்றன.

*1850*ஆம் ஆண்டில் விதைக்கப்பட்ட அமலமரித் தியாகிகளின் கல்வி விதை, இன்று உலகம் முழுவதும் பல துறைகளில்பணியாற்றும்பழையமாணவர்களின்சாதனைகளாக வளர்ந்து நிற்கிறது. புனித பத்திரிசியார் கல்லூரியின் கல்விப் பாரம்பரியம், அமலமரித்தியாகிகளின் அர்ப்பணிப்பு, தியாகம் மற்றும் தொலைநோக்குப் பார்வைக்கு நிலையான சான்றாகும். எதிர்காலத்திலும் இந்தப் பாரம்பரியம் பாதுகாக்கப்பட்டு, நவீன கல்வித் தேவைகளுக்கு ஏற்ப மேலும் வளப்படுத்தப்படுவது, கல்லூரியின் வளர்ச்சிக்கும் இலங்கையின் கல்வி முன்னேற்றத் திற்கும் இன்றியமையாததாகும்.

**Bibliography**

THE PATRICIAN., Very Rev. Fr. T.M.F. Long, OMI, Centenary Souvenir., the official publication of the St. Patrick's college, alimni association, United Kingdom.

ST.PATRICK'S COLLEGE, JAFFNA., 1850-1975., 125th anniversary.

CENTURY OF PROGRESS., St. Patrick's college, Jaffna, Ceylon.

ST. PATRICK'S COLLEGE, JAFFNA., 150th anniversary jubilee souvenir.